**தேசிய லொத்தர் சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய லொத்தர் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடெனப்து உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2003 ஆண்டின் போது அறிமுகப்படுத்தியிருந்த | மையப்படுத்தப்பட்ட Sage | கணினி மென்பொருள் |

| | | |
|---|---|---|
| மையப்படுத்தப்பட்ட Sage ACCPAC எனும் கணினி மென்பொருள் மூலம் சபையின் கணக்கு வைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்டிருந்தமையால் அந்த மென்பொருளில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் வரையறையாகியது. முன்னர் காணப்பட்ட மையப்படுத்தப்பட்ட முறைமையின் மூலம் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணப்பட்ட நம்பிக்கைத் தன்மையும் இந்த பன்முகப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் கேள்விக் குறியாக இருந்ததுடன், அடிக்கடி உரிய மாற்றங்கள் செய்யப்படுவதனால் ஏற்படக் கூடிய ஆபத்து நிலைமைகளின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளல் இந்த மென்பொருளை அறிமுகப்படுத்திய கம்பனியும் மறுத்துள்ளது. | Accpac கணினி மென்பொருளை பயன்படுத்தும் போது ஏற்பட்டிருந்த கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ஒன்று பிரதான நாட்குறிப்பில் எஞ்சியுள்ளது. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல்களை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்காக Accpac முறைமைக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட Accpac மெடியூலர்களை பிரதான நாட்குறிப்பில் இருந்து அகற்றப்பட்டு வெவ்வோறாக இரண்டு முறைமைகள் என தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக சில உள்ளகக் கட்டுப்பாட்டு குணாதிசயங்கள் அகன்றிருந்தமையால் சில வசதிகள் செயற்படாதிருந்தமையால் நடைமுறைச் சிக்கல் நிலைமைகளை தவிர்ந்து, அதற்காக விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்திய பின்னர் மீண்டும் மையப்படுத்தப்பட்ட முறைமைக்கு தொடர்புபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறைமை மற்றும் கணினி பாதுகாப்பு முறைமை என்பவற்றை நாளது வரை பராமரித்து மிகவும் நம்பிக்கையுடன் குறிக்கோள் சார் கருமங்களை நிறைவேற்றும் முகமாக பேணப்பட்டு வர வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய PE/LO/NLB/Gen/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் | நிதியமைச்சர் மற்றும் பிரதமருடன் மேற்கொள்ப்பபட்ட கலந்துரையாடலின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 550 மில்லியன் | அந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள தால், கணக்குகளில் பொருந்தும் வகையில் |

| | | |
|---|---|---|
| கடிதத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டங்களிலிருந்து ரூபா 600 மில்லிலயன் திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சபையினால் 2016 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 550 மில்லியன் கூட்டுத்தொகை திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் சபையின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 550 மில்லியன் பொது திறைசேரியிலிருந்து சபையின் கட்டிடங்கள் திரண்ட நிதியத்திற்கு பெற வேண்டிய பணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்களில் தேசிய லொத்தர் சபைக்கு அவ்வாறான செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்படவில்லை. இது தொடர்பில் 2022 மே 25 ஆந் திகதிய PED/S/NLB/3/3(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ்வாறு குறிப்பிடப்பட்ட பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளமையால் அப்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வது பொதுவாக இடம்பெறுவதில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய பெற வேண்டிய கணக்கு அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது, | பொதுத்திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. முன்னாள் தலைவரால் 2016 செப்தெம்பர் 19 ஆந் திகதி திறைசேரியின் பிரதி செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் திறைசேரியின் பிரதி செயலாளரினால் இந்தப் பணத்தை மீள வழங்குவதற்கு இணங்கியுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் குறிப்பிட்டு 2022 யூன் 08 ஆந் திகதி நிதியமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | சீராக்கங்கள் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்படு மூலதன மாற்றங்களினுள் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் வேறுபாடுகள் மற்றும் செலுத்தப்பட்ட பணிக்கொடை படிகளின் பெறுமதி ரூபா 2,184,950 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது பணிக்கொடைக்காக செலுத்தப்படும் பணத்தின் பெறுமதியாக ஆண்டிற்குரிய மொத்த செலவினமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகை வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் மாற்றங்களுடன் சீராக்கப்பட வேண்டும். எனினும் இந்த தவறுதலின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் பெறுமதி மாற்றமடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்த முடியும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்கள் மிகவும் துல்லியமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்கின் மீதி ரூபா 14,500,033 ஆகும். அம்மீதியினுள் 2019 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வழங்குனர்கள் மற்றும் கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட 56 காசோலைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் உள்ளடங்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பரிசோதித்து குறித்த கணக்குகளுக்கு சீராக்கம் செய்து இரத்துச் செய்யப்பட்ட | 06 மாதங்களை கடந்த கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை இரத்துச் செய்து அப்பெறுமதியை தற்காலிக பேரேட்டுக் கணக்கான இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கிற்கு மாற்றப்படுவதுடன் அது நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அக்காசோலைகள் மேலும் 06 மாதங்களினுள் கோரப்பட்டால் இரத்துச் செய்யப்பட்ட காசோலைக் கணக்கின் ஊடாக மீண்டும் வழங்கப்படுவதுடன் அவ்வாறு கோரப்படாவிடின் அக்காசோலைகள் சபையின் வருமானத்திற்கு | கணக்கின் மீதி சரிபார்க்கப்பட்டு, தொடர்புடைய கணக்குகளில் சரிசெய்தல் செய்யப்பட வேண்டும், மேலும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசோலைகள் கணக்கின் மீதியை தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் வெளிவாரி நிறுவனங்கள் இரண்டிற்கு செலுத்த வேண்டிய ரூபா 11,241,250 கூட்டுத்தொகையான அட்டுறு செலவினம் தொடர்பில் அந்நிறுவனங்களின் சட்ட நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சீராக்கப்படும். சட்ட சிக்கலின் அடிப்படையில் விடுவிக்கப்படாத தனியார் நிறுவனங்கள் இரண்டிற்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 3,910,000 மற்றும் ரூபா 7,331,250 எனுமாறு ரூபா 11,241,250 கூட்டுத்தொகைக்குரிய காசோலைகள் 2020 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கில் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்த மீதியை அட்டுறு செலவினக் கணக்கிலிடப்படும். | |
| (ஈ) | சபையினால் மக்கள் வங்கியில் பேணப்படும் மகாஜன சம்பத ஜனாதிசேகய சுவர்ண ஜயந்தி கணக்கிற்காக தயாரிக்கப்பட்ட 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காசுப்புத்தகத்தில் உள்ளடக்கப்படாத இரு வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்ட மற்றும் செலவு வைக்கப்பட்ட மீதிகள் முறையே ரூபா 72,260,545 மற்றும் ரூபா 76,970,786 ஆகும். 2010 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் அம்மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வங்கிக் கணக்கு மகாஜன சம்பத 4000 மற்றும் மகாஜன சம்பத ஜனாதிசேகய சுவர்ண ஜயந்தி காசுப்புத்தகம் (B700) இற்காக திறக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் இந்த கணக்கு ரஜநிலும மற்றும் ரன்கிருண ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்படுவதுடன் அதன் பின்னர் அந்த காசுப்புத்தகம் தீர்ப்பனவு செய்யப்பட்டு உரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்கு முன்னர் (B690) காசுப்புத்தகம் மீண்டும் கொவிஜன வீசெட சீட்டிழுப்பு இலக்கம் 0003 இற்காக பயன்படுத்த நேர்ந்தது. கொவிசெத விசேட சீட்டிழுப்பிற்கு காசுப்புத்தகத்தினை தீர்ப்பனவு செய்தல் நிறைவு செய்யப்பட்டு அதன் பணத்திற்குரிய கணக்குகள் உரிய கணக்கிற்கு மாற்றுவதற்கு யூன் மாத இறுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த தீர்ப்பனவுகள் நிறைவு செய்த பின்னர் ரஸநிலும | வங்கி இணக்கக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளம் காணப்படாத நிலுவைகள் அடையாளம் காணப்பட்டு முறையாக தீர்க்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் ரன்கிருள ஆகிய காசுப்புத்தகங்களை தீர்ப்பனவு செய்தல் இடம்பெறும். அதன் மூலம் இந்த வங்கிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு மற்றும் செலவு மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படும். | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சீட்டிழுக்கப்பட்ட ஜயவிரு சம்பத லொத்தர் சீட்டிழுப்பிற்காக ரூபா 1,000,000 ஆன பரிசுத் தொகை மற்றும் 2019 ஆகஸ்ட் 24 ஆந் திகதி சீட்டிழுக்கப்பட்ட மகாஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்புக்கான வெற்றி பெற்றவருக்கான மோட்டார் வாகனம் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,350,000 என ரூபா 4,350,000 கூட்டுத்தொகையான இரு வெற்றிபெற்ற லொத்தர் சீட்டுக்களுக்கான கொடுப்பனவு தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அம்மீதிகள் தொடர்ந்தும் செலுத்த வேண்டிய வெகுமதி மீதிகளாக உள்ளடக்கப்பட்டிருந்தன. | இந்த பரிசில்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் இருப்பதால், உரிய பரிசுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. | தாமதமின்றி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பந்தி 10(5) மற்றும் 1997 இன் 35 | லொத்தர் வருமானத்தில் இருந்து அதிகார சட்டத்தின் மூலம் அறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள செலவுகள் கழித்த பின்னர் மீதியை திரட்டப்பட்ட | நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட்டால், நிறுவனம் அன்றாட நடவடிக்கைகளில் பெரும் நிதி நெருக்கடியை | தொடர்புடைய சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க நிதி (திருத்திய) அதிகார சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1963 இன் 11 இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 17(2) | நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தடுத்து வைக்கப்பட்ட இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,529,921 தொகை அவ்வாறு திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் 2021 திசெம்பர் 31 திகதி வரை சபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | சந்திக்க நேரிடும். எனவே, நிறுத்தி வைக்கப்பட்ட முழு லாபத்தையும் அரசாங்கத்தின் திரண்ட நிதியில் செலவு வைக்க முடியாது. இது தொடர்பாக, 2021 நவம்பர் 16 ஆந் திகதியிட்ட கடிதம் மூலம் நிதி அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2021ஆம் ஆண்டில் விசேட தீர்வை (Special Levy) ரூபா 900 மில்லியன் சிறப்பு வரியாக திறைசேரிக்கு மாற்றப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அரச நிதிக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் ஒரு தொகைப் பணம் நிதியமைச்சரின் அங்கீகாரமின்றி முதலீடு செய்யப்படக்கூடாத போதிலும் சபையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 5,071 மில்லியன் மற்றும் ரூபா 1,353 மில்லியன் முறையே நிலையான வைப்புக்களிலும் கால வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த முதலீட்டு நடவடிக்கைகள் பிரதான நிதி உத்தியோகத்தரின் மற்றும் தலைவரின் ஒப்புதலுடன் செய்யப்படுகின்றன, மேலும் அடிக்கடி செய்யப்படும் இந்த குறுகிய கால முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதி அமைச்சகத்தின் ஒப்புதலைப் பெறுவது நடைமுறையில் இல்லை. அத்துடன், நிதியமைச்சரின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட Operational Manual for State Owned Enterprises இல் குறைந்தபட்சம் ரூபா 30 பில்லியன் புரள்வு கொண்ட நிறுவனங்களுக்கு முதலீட்டுக் குழு இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எங்கள் நிறுவனம் அத்தகைய குழுவை நியமிக்க | தொடர்புடைய சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், சமீபத்திய முடிவுகளின் அடிப்படையில் சிறப்பு முதலீடுகள் இருந்தால் மட்டுமே, அதற்கென ஒரு முதலீட்டுக் குழு நியமிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும். | |
| (இ) | நிதிப் பிரமாணக் கோவை<br>--------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2) | சபையினால் மீளாய்வாண்டில் பதவி நிலை தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு 09 சந்தர்ப்பங்களில் ரூபா 622,000 கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்கட்டு நிதிகளில் ரூபா 139,000 தொகையினை தீர்ப்பதற்கு 03 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான வீச்சில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. | இந்த முற்பணங்கள் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் ஊழியர்களை கொண்டு செல்வதற்காக எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட முற்பணம் ஆகும். இந்த முற்பணத்தை வழங்குதல் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அவசர சந்தர்ப்பமொன்றில் மேற்கொள்வதற்கு நேருமெனில் இந்த தொகையை விஞ்சாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் நிதிப்பிரமாணம் 371(6) | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த செயல் நிமித்த உபகட்டுநிதிகளில் மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 சந்தர்ப்பங்களுக்குரியதாக ரூபா 802,479 கூட்டுத்தொகையான கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட்டிராததுடன் 2022 | இந்த உபகட்டுநிதி தற்போது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டில் அவற்றை தீர்ப்பனவு செய்யும் திகதியளவில் 20 நாட்கள் முதல் 780 நாட்கள் வரையான வீச்சில் தாமதமொன்று இடம்பெற்றிருந்தது. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் இறுதியளவில் வைப்புச் செய்யப்பட்டு 02 வருட காலத்தினை விஞ்சிய ரூபா 7,766,325 கூட்டுத்தொகையான காலாவதியான கேள்வி வைப்புக்களில் தீர்ப்பனவு செய்வதற்கோ சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கேள்வி வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை பந்தி 15(2) மற்றும் (3) | சபையினால் 1998 ஆம் ஆண்டில் அசரண சரண எனும் பெயருடைய நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு அந்நிதியத்திற்கு லொத்தர் பரிசு பெறுனர்களின் நன்கொடைகள் மற்றும் லொத்தர் விற்பனை வருமானத்தில் 0.005 சதவீதமான அளவு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிதியத்தின் மீதி ரூபா 24,030,981 ஆக காணப்பட்டது. அவ்வாறான விசேட நிதியமொன்றை பேணிச் செல்வதற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய தொகை சட்டத்திற்கு முரணான வகையில் சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நீரோகா லொத்தர் சீட்டில் மற்றும் லொத்தர் பரிசு பெறுனர்களின் நன்கொடையினால் இந்த நிதியம் உருவாகியுள்ளதுடன் தற்போது நிதியத்திற்காக பரிசு பெறுனர்களின் பங்களிப்பு கிடைப்பதில்லை. 2020 செப்தெம்பர் 09 ஆந் திகதி நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட PED/P/2/25(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 3832-17 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ரூபா 2 மில்லியன் தொகை வருடாந்தம் அசரண சரண நிதியத்தின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஒதுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதற்கமைய 2022 ஆம் ஆண்டிற்காக இதுவரையிலும் கிடைத்துள்ள கோரிக்கைகளை கருத்தில் கொண்டு தேவைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் நிதிப் பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பதவியணிக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப் பட்டிருந்ததுடன் அவ்வாறு ஒவ்வொரு லொத்தர் சீட்டு விற்பனை வருமானத்தினையும் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளாக ரூபா 110,344,291 செலுத்தப்பட்டிருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையில் ஊக்குவிப்பு பணம் செலுத்துவதற்காக நிதியமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்டமையால் நிதி அமைச்சருக்கு பதிலாக சனாதிபதி செயலாளரினால் ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>2012 யூன் 12 ஆந் திகதிய NLB/AD/EX2012 ஆம் இலக்க கடிதத்தில் ஊக்குவிப்பு கொடுப்பனவை கணிப்பீடு செய்யும் சதவீதத்தினை அதிகரிப்பதற்காக நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. 2019 சனவரி 25 ஆந் திகதிய PE/TR/DLB/Gen/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் முன்னர் பேணிச் சென்ற 0.5% ஊக்குவிப்பு கொடுப்பனவு தொகையினை கணக்கீடு செய்யும் எல்லையினையே பேணிச் செல்வதற்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பொது முயற்சிகளின் ஊக்குவிப்பு கொடுப்பனவை செலுத்துவதற்கு பொதுக் கொள்கையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 1993 ஜனவரி 21 திகதிய PE1/70/7/Vo11 இலக்கம் கொண்ட திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதம் | அரசின் சார்பாக நடாத்தப்படும் அனைத்து லொத்தர் வருமானங்களின் 16.5 சதவீதம் ஒன்று திரட்டிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டும். மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 11 வகையான லொத்தர்களில் இருந்து குறிப்பிட்ட சதவீதத்தை விட குறைவான அதாவது 10 சதவீத பெறுமதி மாத்திரம் திரட்டிய நிதியத்திற்கு அனுப்பியிருந்தமையால், மேலும் திறைசேரிக்கு அனுப்பப்படாத பெறுமதி ரூபா 681,851,572 தொகையாக இருந்தது. | சபையினால் பேணிச் செல்லப்படும் சதவீதத்தின் பிரகாரம் லொத்தர் சீட்டுக்களுக்குரிய பங்களிப்புத் தொகையை சரியான திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. இந்த சதவீதங்கள் தொடர்பில் பொது அங்கீகாரமொன்றை கோரி நிதியமைச்சுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அக்கடிதங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,003,355,136 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,434,824,231 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 431,469,095 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக

மீளாய்வாண்டின் போது அவ்வப்போது லொத்தர் விற்பனை நிறுத்ததப்பட்டமை மற்றும் அதன் பின்னர் லொத்தர் விற்பனை குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களில் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

சபையின் 2021 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய லொத்தர் வருமானம் மற்றும் விளம்பரச் செலவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விபரம் | 2021 | 2020 | வேறுபாடு | வேறுபாடு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| **வருமானம்** | | | | |
| லொத்தர் விற்பனை வருமானம் | 17,292,066,088 | 18,041,145,000 | (749,078,920) | 4.15 |
| விற்பனைக் கிரயம் | 14,396,877,247 | 14,923,669,223 | (526,791,976) | 3.53 |
| விறபனை, சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு செலவினம் | 1,074,102,918 | 893,002,443 | 181,100,475 | 20.28 |

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 749,078,920 தொகையினால் மற்றும் விற்பனைக் கிரயம் ரூபா 526,791,976 தொகையினால் குறைவடைந்திருந்ததுடன் அதனை சதவீதமாக முறையே 4.15 சதவீதம் மற்றும் 3.53 சதவீதமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சபையின் லொத்தர் விற்பனை வருமானம் 4.15 சதவீதத்தினால், விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக செலவினம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 20.28 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் இலாபகரத் தன்மை மற்றும் தொழிற்படு மூலதன விகிதாசாரம் தொடர்பாக பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| விகிதாசாரம் | ஆண்டு 2020 | ஆண்டு 2019 |
|---|---|---|
| (i) மொத்த இலாப விகிதாசாரம் | **14.38** | 14.89 |
| (ii) தேறிய இலாப விகிதாசாரம் | **5.55** | 6 |
| (iii) நடைமுறைச் சொத்து விகிதாசாரம் | **3.1:1** | 2.97:1 |
| (iv) விரைவு சொத்து விகிதாசாரம் | **3.09:1** | 2.95:1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான பொக்செல் வீதியில் அமைந்துள்ள காணியில் வணிக வளாகமொன்றினை நிர்மாணிப்பதற்காக நடைமுறை வேலையாக (Work – in Progress) சபையினால் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் மதியுரை சேவைகளை பெற்றுக் கொண்டமைக்காக ரூபா 27,009,822 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேசிய லொத்தர் சபையின் புதிய உத்தேச கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்தச் செலவு ஒப்பந்தம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கட்டுமான பணியை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | தேசிய லொத்தர் சபை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்தில் வாடகை இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் 08(6) பந்தியின் பிரகாரம் தொலைபேசி, நீர் மற்றும் மின்சாரம் கட்டணங்களுக்காக மேலதிக பாதுகாப்பு வைப்பொன்றாக ரூபா 24,357,375 செலுத்தியிருந்தது. உடன்படிக்கையின் 08(9) பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆரம்ப வைப்பில் இரண்டு வருடங்கள் நிறைவடையும் போது ரூபா 63,329,175 எஞ்சியுள்ளமை தொடர்பில் புரிந்துணர்வுடன் விளைவற்ற விதத்தில் நிறுவனத்தினால் கட்டிடத்தின் உரிமையாளருக்கு ரூபா 24,357,375 மேலதிகமாக | சபை மற்றும் கட்டிட உரிமையாளர் ஆகியோருக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்காக பாதுகாப்பு வைப்பொன்றாக 03 மாத காலத்திற்கான வாடகைத் தொகையான ரூபா 24,357,375 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் வைப்பொன்றாக 12 மாத கால வாடகைத் தொகையான ரூபா 63,329,175 கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.2019 சனவரி மாதம் முதல் 2020 ஆகஸ்ட் மாதம் வரையிலான உடன்படிக்கையின் பிரகாரம் வைப்புத் தொகையில் மாதாந்தம் 35 சதவீதப்படி மாதாந்த வாடகையிலிருந்து கழிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை | சபைக்கு சாதகமான முறையில் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் பாதுகாப்பு வைப்பு தற்போது கட்டிட உரிமையாளரின் பொறுப்பில் காணப்படுகின்றது. |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒரு லொத்தர் சீட்டினை ஐக்கிய அமெரிக்க டொலர் 10 இற்கு விற்பதற்காக 2016 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 30,000 எண்ணிக்கையான டொலர் போர்ச்சூன் லொத்தர் சீட்டுக்களுக்கிடையே 569 லொத்தர் சீடுடுக்கள் காணாமல் போயிருந்தது. இந்த காணாமல் போன லொத்தர் சீட்டுக்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திதகியில் உள்ளபடியான பெறுமதி ரூபா 1,594,906 ஆக காணப்படுவதுடன் அந்த காணாமல் போன லொத்தர் சீட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கும் அந்நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த லொத்தர் சீட்டிழுப்பு 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த லொத்தர் சீட்டிழுப்பிற்குரியதாக காணாமல் போன லொத்தர் சீட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் மொத்தமான 30,000 லொத்தர் சீட்டுக்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் போது 786 லொத்தர் சீட்டுக்கள் மாத்திரம் காணாமல் போயுள்ளதுடன் அது தொடர்பில் தகவல்களை ஆராய்வதற்கு முடியாதுள்ளது. சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாத லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்த நபர்கள் யார் என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக தொகுதி இலக்கம் குறிப்பிட்டு மும்மொழிகளிலும் பத்திரிகை அறிவித்த லொன்று வெளியிடப்பட்டது. அதன் மூலம் தகவல் பெற்றுக் கொள்ள முடியாதிருந்த மையால் லொத்தர் சீட்டுக்களின் எண்ணிக்கையை தீர்மானித்து அந்த லொத்தர் சீட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு சீட்டிழுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இழப்பு மற்றும் அதற்குப் பொறுப்பான தரப்பினரைக் கண்டறிந்து இழப்பை வசூலிக்க முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் இடம்பெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபையின் பல்வேறு 03 பிரிவுகளுக்குரிய ரூபா 3,418,665 கூட்டுப்பெறுமதியான பொருட்கள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. 11 ஆம் இலக்கத்திற்குரிய ரூபா 1,473,327 கூட்டுப் பெறுமதியுடைய பொருட்கள் சேதத்திற்கு உள்ளாகியிருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருள் மெய்மையாய்வில் சமர்ப்பிக்கப்பட்டிராத பொருட்கள் தொடர்பில் மீள ஆராயப்பட்டது. காணாமல் போனதாக குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான புத்தகப்பெறுமதி ரூபா 310,693 ஆகும். இவ் உருப்படிகள் தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். | அடையாளம் காணப்படாத மற்றும் சேதமடைந்த பொருட்கள் மீது முறையான விசாரணை செய்யப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் லொத்தர் விற்பனை முகவர்களிடமிருந்து ரூபா 103,190,357 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த விற்பனை முகவர்களினால் அதற்காக பிணையொன்று வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 20,400,906 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் பெறுமதிக்காக மாத்திரம் அவ்வாறு பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. லொத்தர் கடன்பட்டோர் மீதியில் 80 சதவீதம் அல்லது ரூபா 82?789,451 கூட்டுத்தொகையான கடன் மீதிகளுக்காக அவ்வாறு வங்கிப் பிணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஆரம்ப காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை பிரதிநிதிகளிடம் வங்கி உத்தரவாதம் பெறாத நிலையில், தற்போது புதிய விற்பனை பிரதிநிதிகளை நியமிக்கும் போது வங்கி உத்தரவாதம் பெறப்பட்டு வருகிறது. பழைய மாவட்ட விற்பனை பிரதிநிதிகளிடம் இருந்து எவ்வளவு வங்கி உத்தரவாதத்தை பெற முடியுமோ அவ்வளவு வங்கி உத்தரவாதம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | லொத்தர் சீட்டுக்களின் விற்பனை பிரதிநிதிகளிடம் உத்திரவாதங்கள் உரிய முறையில் பெறப்பட வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 365 | சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்களுக்காக 2021 | முறையான அறவீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | நாட்களை விஞ்சிய கடன்பட்டோர் பெறுமதி ரூபா 29,271,401 ஆக காணப்பட்டதுடன் அந்த அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவற்றுள் வங்கிப் பிணையுடனான கடன்பட்டோரின் பெறுமதியான ரூபா 2,299,197 ஆன வங்கிப் பிணையை காசாக்குவதற்கு சபை தவறியிருந்தது. | திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 365 நாட்களை விஞ்சிய கடன்பட்டோர் பெறுமதி ரூபா 13,334,463 ஆகும். 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 365 நாட்களை விஞ்சிய விரைவுக் கடன் பெறுமதி ரூபா 15,936,737 ஆகும். அவற்றுள் வங்கிப் பிணையுடனான கடன்பட்டோர் பெறுமதி ரூபா 126,015 ஆக காணப்படுவதுடன் ரூபா 9,887,694 பெறுமதியான கடன்பட்டோர் பெறுமதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நடைமுறையொன்று நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சபையில் பதிவு செய்த விற்பனை முகவர்களிடையே 64 விற்பனை முகவர்களுக்கு உடனடி லொத்தர் சீட்டுக்களும் 79 விற்பனை முகவர்களுக்கு பசிவ் லொத்தர் சீட்டுக்களும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் உடனடி லொத்தர் சீட்டுக்களுக்காக 10 விற்பனை முகவர்களுக்கும் பசிவ் லொத்தர் சீட்டுக்களுக்காக 25 விற்பனை முகவர்களுக்கு மாத்திரம் வங்கிப் பிணைகள் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய உடனடி லொத்தர் சீட்டுக்களுக்காக 54 விற்பனை முகவர்களிடமும் பசிவ் லொத்தர் சீட்டுக்களுக்காக 54 விற்பனை முகவர்களிடமும் வங்கிப் பிணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை பிரதிநிதிகளிடம் வங்கி உத்தரவாதம் பெறாத நிலையில், தற்போது புதிய விற்பனை பிரதிநிதிகளை நியமிக்கும் போது வங்கி உத்தரவாதம் பெறப்பட்டு வருகிறது. பழைய மாவட்ட விற்பனை பிரதிநிதிகளிடம் இருந்து எவ்வளவு வங்கி உத்தரவாதத்தை பெற முடியுமோ அவ்வளவு வங்கி உத்தரவாதம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | அனைத்து விற்பனை பிரதிநிதிகளிடம் வங்கி உத்தரவாதங்கள் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான Colombo Airport Super Draw லொத்தர் சீட்டு விற்பனையின் அடிப்படையிலான கடன்பட்டோர் மீதி ரூபா 5,151,652 ஆகும். இந்த லொத்தர் சீட்டிழுப்பு இறுதியாக 2018 சனவரி 21 ஆந் திகதி இடம்பெற்றிருந்தது. இந்த கடன்பட்டோர் மீதி 2022 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்ததுடன் அந்த மொத்த பெறுமதிக்காகவும் ஐயக் கடன் ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இடம்பெற்றிருந்தது. | கொழும்பு விமான நிலையத்தின் சுப்பிரி லொத்தர் சீட்டின் ரூபா 5,151,652 ஆன கடன்பட்டோர் மீதியில் மீதியொன்று நிலவுவதுடன் அது Splash Advertising நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக காணப்படுவதுடன் இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவிற்கு 2018 யூன் 22 ஆந் திகதி முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து கடன் நிலுவை வசூலிக்கப்பட வேண்டும். |
| (உ) | பல்வேறு சீட்டிழுப்புக்களுக்காக கட்டளையிடப்படும் லொத்தர் சீட்டுக்களின் அளவுகள் அச்சிடப்பட்டு உரிய காலப்பகுதியில் கையளிப்பதற்கு தவறினால் குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் அச்சீட்டு நிறுவனத்திடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். அந்த தண்டப்பணம் அந்நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்படும் அதற்கடுத்த கொடுப்பனவிலிருந்து கழிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டும். 2020 சனவரி 20 ஆந் திகதி முதல் 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்ற 13 லொத்தர் சீட்டுக்களுக்கு உரியதாக லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டமையால் | 2020 சனவரி 20 ஆந் திகதி முதல் 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்ற அச்சிடப்பட்ட டிக்கட் பத்திரங்களின் தாமதம் காரணமாக மெகாபவர் 616, 618 மற்றும் 620 ஆம் தவணைகள் நீங்கலாக ஏனைய தவணைகளுக்காக தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. மெகாபவர் 616, 618 மற்றும் 620 சீட்டுழுப்புக்களில் அச்சீட்டுக் கோளாறுகள் நிலவியமையால் அந்த சீட்டுழுப்புக்களுக்கான கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டதுடன் அந்த அச்சீட்டு வழுவினை விசாரிப்பதற்காக அச்சீட்டு வழு விசாரணைக் குழுவிற்கு முன்வைக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அச்சீட்டாளருக்கு ரூபா 1,031,759 ஆன தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்ததுடன் அத்தண்டப்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த தண்டப்பணம் மற்றும் தாமதத்திற்கான தண்டப் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | சபையின் முன்னாள் உத்தியோகத்தர்களினால் மீள கையளிக்கப்படாத சொத்துக்களுக்காக ரூபா 275,908 ஆன மீதியொன்று அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அவ்வாறே பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களின் கைதவிர்ப்பின் அடிப்படையில் ரூபா 33,127 தொகையுமாக ரூபா 309,035 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | சபையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் நீங்கிச் செல்லும் போது அவர்களால் மீள கையளிக்கப்படாத சொத்துக்களுக்காக ஏனைய பொருட்களுக்காகவும் அவர்களால் சபைக்குச் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள தொகை ரூபா 275,908 ஆகும். அந்த தொகையினை அறவிடும் பணிகளுக்காக தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | திரும்பப் பெறாத சொத்துக்களுக்கு அறவிட வேண்டிய தொகையை உடனடியாக வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (எ) | விற்பனை முகவர்களுக்கு வழங்கப்பட்ட சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், கணனி உபகரணங்கள் மற்றும் விற்பனை கூடாரங்கள் ஆகியவற்றுக்காக ரூபா 835,218 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபை தவறியிருந்தது. | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 724,068 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | விற்பனை பிரதிநிதி களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடனின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மரணமடைந்த, பணி வறிதாக்கப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய விழா முற்பணங்களாக ரூபா 2,187,952 | விழா முற்பணம் ரூபா 5,000 தொகையும், இடர்கடன் ரூபா 645,130 தொகை மற்றும் வீட்டுக் கடன் ரூபா 1,521,196 தொகையும் அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளது. ரூபா 1,696 தொகையான இடர்கடன் மீதியை | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையினை அறவிடுவதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபை தவறியிருந்தது. | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எஞ்சிய கடனை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஐ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வெகுமதி ஒதுக்க நிதியத்தின் மீதி ரூபா 2,411,724,762 ஆக காணப்பட்டதுடன் அதனுள் நிலவும் ஜனாபிசேகய, மனுசத் மெஹிவர, ரன்கிருள, ரஜதினும ஆகிய லொத்தர் சீட்டுக்களுக்குரிய சீட்டிழுப்புக்களை நடாத்தி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. ஜனாபிசேகய லொத்தர் சீட்டின் திரண்ட நிதியத்தின் மறை மீதியான ரூபா 6,759,950 மற்றும் மனுசத்மெஹிவர, ரன்கிருள மற்றும் ரஜதினும ஆகிய லொத்தர் சீட்டுக்களின் ஒதுக்க நிதியங்களின் நலனான மீதியான ரூபா 15,166,256 கூட்டுத்தொகையும் தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரஜதினும, ரன்கிருள ஆகிய லொத்தர் சீட்டுக்களுக்குரிய ஒதுக்க நிதியத்தில் காணப்படும் மீதியின் அடிப்படையில் ரூபா 14,929,592 ஆன தொகை காசாக ரூபா 5,016,076 தொகை 2022 யூன் மாதம் இறுதி வரையிலும் குறித்த கணக்குகளுக்கு மாற்றப்படுவதுடன் எஞ்சிய தொகையான ரூபா 9,913,516 ஆன நிதி 2022 ஆகஸ்ட் மாதத்தின் இறுதியளவில் குறித்த கணக்குகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>அவ்வாறே மனுசத்மெஹிவர மற்றும் ஜனாவிசேகய ஆகிய லொத்தர் சீட்டுக்களுக்குரிய ஒதுக்க நிதியத்தின் மீதிகள் 2020 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையிலும் குறித்த கணக்குகளுக்கு மாற்றுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த கணக்குகளின் தீர்ப்பனவு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஒ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலுத்த வேண்டிய வெகுமதி மீதியாக ரூபா 1,070,847,638 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதனுள் பவர் லொட்டோ, ரஜதினும, ரன்கிருள மற்றும் மகாஜன சம்பத ஜனாவிசேகய லொத்தர் சீட்டுக்களுக்கான வெகுமதி பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா | மகாஜன சம்பத ஜனாவிசேகய பரிசில் கொடுப்பனவுக் கணக்கில் காணப்படும் ரூபா 15,517,440 ஆன மீதியில் ரூபா 3,775,950 ஆன தொகை 2022 மார்ச் 22 ஆந் திகதி உரித்து கோரப்படாத பரிசில்களாக பொதுத்திறைசேரிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய மீதி அந்த காசுப்புத்தகத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டு | காலாவதியான மீதிகளை பொது திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு மற்றும் கணக்கு மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | 15,799,882 ஆக காணப்பட்டது. குறித்த லொத்தர் சீட்டிழுப்புக்களை நடாத்தி 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் இப்பெறுமதி தொடர்பில் குறித்த வெகுமதி பெறுமதிகள் வெற்றியாளருக்கு செலுத்துவதற்கோ உரித்து கோரப்படாத வெகுமதிகளை இனங்காணல் மேற்கொள்ளப்படாது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செலுத்த வேண்டிய வெகுமதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய கணக்குகளுக்கு மாற்றுவதற்குரிய பணிகள் தற்போது இடம்பெற்றவாறுள்ளது. பவர் லொட்டோ, ரஜதினும மற்றும் ரன்கிருள ஆகிய காசுப்புத்தகங்களும் தீர்ப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் குறித்த கணக்குகளுக்கு மாற்றுவதற்கு உரிய பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஓ) | மாவட்ட விற்பனை பிரதிநிதிக்கு விற்பனைக் கூடாரங்களை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 1,380,400 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. குறித்த தரப்பினருக்கு விற்பனைக் கூடாரங்களை வழங்குவதற்கு அல்லது பெற்றுக் கொண்ட பணத்தை தீர்ப்பனவ செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது குறித்த மீதி தொடர்ச்சியாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | விற்பனைக் கூடாரங்களை பெற்றுக் கொள்வதற்காக பணம் வைப்புச் செய்த 101 விற்பனை முகவர்களுக்கு சபையினால் விற்பனை கூடாரங்களை வழங்குவதற்காக ரூபா 1,380,400 ஆன மீதி காணப்படுவதுடன் இந்த ஆண்டினுள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள விற்பனைக் கூடாரங்களுக்காக இந்தப் பணத்தை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கும் பணிகள் முன்னெடுக்கப்படும். | குறித்த பணத்தை ஈடுசெய்யும் நடைமுறைகள் துரிதப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஔ) | விற்பனை பிரதிநிதிகளினால் வெற்றி பெற்ற லொத்தர் சீட்டுக்களை ஸ்கான் செய்வதற்கு பதிலாக ஒரு லொத்தர் சீட்டிற்காக ரூபா 0.075 சபையினால் குறித்த | மாவட்ட விற்பனை முகவரிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட கடன் தொகைக்கு அவர்களுக்கு செலுத்துவதற்குள்ள லொத்தர் சீட்டுக்களை | செலுத்த வேண்டிய மற்றும் அறவிடப்பட வேண்டிய பெறுமதிகளை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை பிரதிநிதிக்கு செலுத்தப்படும். இவ்வாறு விற்பனை லொத்தர் சீட்டுக்களை ஸ்கான் செய்வதற்காக 2020 முதல் விற்பனை பிரதிநிதிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 5,380,221 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாது வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஸ்கான் செய்வதற்கான கட்டணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் மாவட்ட விற்பனை பிரதிநிகளால் குறித்த லொத்தர் சீட்டுக்களுக்கான கடன் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் இந்த நிறுத்தி வைக்கப்பட்ட ஸ்கான் கட்டணங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (க) | புதிய விற்பனை முகவர்களை பதிவு செய்யும் போது சபையினால் அறவிடப்படும் பதிவுக் கட்டணமாக ரூபா 988,500 அறவிடப்படாது 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மீதியை தொடர்ந்தும் அறவிடுவதற்கு இயலுமையொன்று இல்லாதிருந்தமையால் பணிப்பாளர் சபையினால் இந்த மீதியை பதிவழிப்பதற்கு 2022 மார்ச் 14 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் அந்த மீதி 2022 யூன் மாதத்தில் மாதாந்த கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கா) | 2017 யூலை 18 ஆந் திகதி அமைச்சரவையினால் சபையினால் தற்போது நடாத்திச் செல்லப்படும் வணிக வளாகம் 2020 செப்தெம்பர் மாதத்திற்கு நிறைவு செய்யப்படும் வகையில் 02 வருட காலத்திற்கு வாடகைக்கு எடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த குத்தகை காலம் நிறைவடைந்த பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 2022 மார்ச் மாதமளவில் அந்த | தற்போது தேசிய லொத்தர் சபை நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்தின் குத்தகைக் காலம் 2020 செப்தெம்பர் 01 ஆந் திகதி நிறைவடைந்திருந்தமையால் அதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் புதிய கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக பெறுகைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் அந்த பெறுகையானது 2021 மார்ச் 03 ஆந் திகதியே நிறைவு செய்யப்பட்டது. எனினும் | குறித்த முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 117,782,484 ஆன குத்தகை வாடகை செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்பார்த்தவாறு மேற்படி பெறுகையிலிருந்து பொருத்தமான கட்டிடமொன்றினை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் பெறுகையினை எதிர்பாராதவாறு பிற்போடப்பட்டமையால் இந்தக் கட்டிடத்தின் குத்தகை காலப்பகுதியை சிறிய காலப்பகுதிக்கு நீடிப்பது நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு குறுகிய காலப்பகுதியினுள் குத்தகை உடன்படிக்கை நீடிப்புச் செய்யும் போது அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல் தொடர்பில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. இந்த குத்தகை காலப்பகுதியினை நீடிப்புச் செய்யும் போது அமைச்சரவையின் ஆரம்பத் தீர்மானத்திற்கு முரணாக எந்தவொரு நிபந்தனையும் குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாததுடன் தேசிய லொத்தர் சபையின் நலன் உச்ச அளவில் பாதுகாக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (கி) | சபையினால் தற்போது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் வளாகத்தை அண்மியதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள 2,880 சதுரஅடிகள் பரப்பளவான கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு 2018 யூலை 24 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் | கட்டிடத்தை கையகப்படுத்த தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரைகளை பெற்றுள்ளது. இந்த கட்டிடம் அமைச்சரவையின் ஒப்புதலின் பேரிலும், அமைச்சரவையின் பெறுகைகள் குழுவின் ஒப்புதலின் பேரிலும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த கட்டிடத்திற்கு சதுர அடிக்கு ரூபா 225 செலுத்த அமைச்சரவையின் | சபைக்கு சொந்தமான காணியின் கட்டிட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளும் போது உத்தேச கட்டிடத்தின் தன்மை தொடர்பில் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்தக் கட்டிடம் முறையான அங்கீகாரமின்றி அத்துமீறிய நிர்மாணமொன்றாக காணப்பட்டது. அத்துடன் சபை அரச நிறுவனமொன்றாக அவ்வாறு சட்டத்திற்கு முரணான வகையில் கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டு 2020 மே மாதம் முதல் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் ரூபா 19,784,250 கூட்டுத்தொகையான வாடகை செலுத்தியிருந்தது. | பெறுகைகள் குழுவின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இதனிடையே, அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்திற்கான திட்டம் மற்றும் முடித்ததற்கான சான்றிதழ் (COC – Certificate Of Completion) வழங்குமாறு கட்டிட உரிமையாளரிடம் பலமுறை தெரிவித்தும் இதுவரை கட்டிட உரிமையாளர் வழங்கவில்லை. | |
| (கீ) | 2016 நவம்பர் 29 ஆந் திகதிய 16/2468/719/150 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சபைக்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காகவும் அதற்காக ரூபா 41 மில்லியன் மதியுரை சேவைகள் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரம் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. 1963 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட | 2016 ஆம் ஆண்டில் சபைக்கு நிரந்தர கட்டிடமொன்று வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்மாணிக்கும் பணிகளுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு முன்னர் மீண்டும் ஒரு தடவை நிரந்தர கட்டிடமொன்றினை நிர்மாணித்தல் இடைநிறுத்தப்பட்டமைக்கு அரசினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் காரணமாக மீண்டும் ஒரு தடவை கட்டிட நிர்மாணம் நிறுத்தப்பட்டுள்ளது. | உரிய தரப்பினருடன் இணக்கப்பாட்டுக்கு வந்து அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுவதுடன் கடந்த 07 வருட காலத்தினுள் மாத்திரம் கட்டிட வாடகைகளுக்காக ரூபா 399,471,200 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (கு) | கடந்த வருடங்களில் கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடைத் தொகை சபைக்கு மீள அறவிடுமாறு பொதுமுயற்சிகள் தொடர்பான குழுவில 2013 மார்ச் 21 ஆந் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை அறவிடுவதற்கோ அல்லது பெற வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த பணிக்கொடைத் தொகை சபைக்கு மீளளிப்பு செய்யுமாறு குறித்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து அறிவுரைகளை பெற்றதன் பின்னர் 2018 யூன் 29 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தின் பிரகாரம் குறித்த பணம் கணக்கு புத்தகங்களிலிருந்து பதிவழிக்குமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2022 மார்ச் 24 ஆந் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ள துடன் இது தொடர்பில் எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையிடமிருந்து அறிவுரைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைத்துள்ள கட்டளைகளின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |
| (கூ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2016/2017 மற்றும் 2017/2018 மதிப்பீட்டு வருடங்களுக்குரிய வருமான வரி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,785,860,482 மற்றும் | சபையானது உரிய வரி முறையீடுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறையாக அனுப்பி வைத்துள்ளதுடன், 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளில் போதிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசித்து மேல்முறை யீடுகளை விரைந்து தீர்க்க வேண்டும். |

அதற்குரியதாக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 819,379,995 ஆக காணப்பட்டது. 2015/2016 மற்றும் 2016/2017 ஆண்டுகளுக்குரியதாக பெறுமதி சேர் வரி மதிப்பீடுகளின் பெறுமதி ரூபா 53,073,024 கூட்டுத் தொகை மற்றும் அதற்குரியதாக விதிக்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 39,474,184 ஆக காணப்பட்டது. 2016 யூன் மாதத்திற்குரியதாக உழைக்கும் போதே செலுத்தும் வரிக்கான மதிப்பீடு ரூபா 419,483 மற்றும் அதற்குரிய தண்டப்பணத்தொகையான ரூபா 255,483 ஆக காணப்பட்டது. அதற்கமைய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மதிப்பீடுகளிலும் விதிக்கப்பட்ட தண்டப் பணங்களினதும் பெறுமதி ரூபா 2,698,462,455 ஆக காணப்பட்டது. இந்தப் பெறுமதியில் 2016/2017 மதிப்பீடு ஆண்டிற்குரிய வருமான வரி தொடர்பில் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கும் எஞ்சியவை தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கும் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 தொழிற்பாட்டு திறைமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மொத்த செலவினத்தில் 57 சதவீதமான அளவு விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு செலவினமாவதுடன் ரூபா 1,074,102,918 தொகையான அச்செலவினத்தில் 84 சதவீதத்திற்கு அண்மிய தொகை விற்பனை மற்றும் விற்பனை மேம்படுத்தல் செலவினம் ஆகும். அவ்வாறே விற்பனை மற்றும் விற்பனை மேம்படுத்தல் செலவினம் ஒட்டுமொத்த செலவினத்தில் 48 சதவீதமான பெறுமதியினை கொண்டிருந்தது. எவ்வாறான போதிலும் போட்டி அடிப்படையிலான சந்தை நிலைமையினுள் செயற்படும் இவ்வாறான நிறுவனங்களுக்காக இந்த மேம்படுத்தல் மற்றும் விளம்பர நடைமுறைகள் பொருத்தமான நடைமுறையா என்பது தொடர்பில் சிக்கலுக்கு உரியதாக காணப்பட்டது. | லொத்தர் சீட்டுக்கள் என்பது நுகர்வு பொருட்கள் அல்லாததுடன், வாங்குவதற்கு நுகர்வோரை தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டும். அதற்கு விளம்பர யுக்திகளைப் பயன்படுத்த வேண்டும். இந்நிலையில், இரண்டு லொத்தர் சபைகளுக்கும் தங்களது விற்பனை வருவாயில் 10 சதவீதத்தை விளம்பர நடவடிக்கைகளுக்காக செலவிட அரசு அனுமதித்துள்ள போதிலும், அவை ஒருபோதும் தேவையற்ற விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, ஆனால் தேவையான விளம்பர முறைகள் மட்டுமே செயல்படுத்தப்படும். | லொத்தருக்கான தற்போதைய சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து லாபகரமான விளம்பர திட்டங்களை செயல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சீட்டிழுக்கப்படும் நாட்களை அண்மிய நாட்களில் லொத்தர் சீட்டுக்களின் இருப்பு களஞ்சியங்களுக்கு கிடைக்கப் பெறும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு இறுதியாக கிடைக்கப்பெற்ற லொத்தர் சீட்டுக்களுக்கு ஒப்பாக களஞ்சியத்தில் காணப்படும் லொத்தர் சீட்டுக்களின் அளவானது 60 சதவீதம் முதல் 158 சதவீதம் வரையான வீச்சில் | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள காலத்திற்குரிய பல சந்தர்ப்பங்கள் சீட்டிழுக்கப்படும் நாட்களுக்கு அண்மிய நாட்களில் இருப்புக்கள் எஞ்சுகின்றமையை காணக் கூடியதாக இருப்பதற்கு தாக்கமளிக்கும் பிரதான காரணம் அதனை அண்மிய தினங்களில் காலநிலை நிலைமைகள் மிகவும் பாதகமாக காணப்படுதல் ஆகும். சுற்றாடல் மற்றும் | மொத்த கட்டளையிடுவதில் விற்பனையின் நிலையான முன்னறிவிப்பு செய்யப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு முகவரின் விற்பனைத் திறனையும் சரியான நேரத்தில் கண்டறிந்து மொத்தமாக கட்டளை இடப்பட |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. இதற்கமைய இருப்புக் கட்டளையிடும் போது விற்பனை தொடர்பில் போதிய எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு விற்பனை முகவர்களினதும் விற்பனை இயலுமையை காலரீதியாக இனங்கண்டு அதற்கமைய இருப்புக் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே சபையினால் மேற்கொள்ளப்பட்ட சில மேலதிக இருப்புக் கட்டளைகளுக்குரிய இருப்புக்களின் அளவானது முழுமையாக களஞ்சியத்தில் எஞ்சியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | சமூக விடயங்கள் (காலநிலை மாற்றமடைதல், ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படல், நாடு மூடப்படல், ஹர்த்தால் போன்ற பாதகமான நிலைமைகள்) ஆகியவற்றுடன் மிகவும் நெருங்கிய தொடர்பொன்று லொத்தர் சீட்டு விற்பனைக்கும் உள்ளது. அந்நிலைமைகளினை கருத்தில் கொண்டு எஞ்சியுள்ள இருப்பினை குறைக்கும் வகையில் கட்டளைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருட காலங்களில் நிதிப் பெறுபேறுகளில் பகுப்பாய்வு செய்யும் போது நிதிப் பெறுபேற்றிற்கு ஊழியர் பணிக்கொடை, நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்திய வரி மீள சீராக்கப்படும் போது 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பில் குறைவொன்றும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் பங்களிப்பில் அதிகரிப்பும் மீண்டும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் குறைவொன்றும் காணப்பட்டது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொவிட்-19 நிலைமை காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடு மூடப்பட்டிருந்தமை, ஊரடங்குச் சட்டம் விதிக்கப்படுதல், போக்குவரத்து தடைகள் மற்றும் மக்கள் ஒன்றுகூடல் மட்டுப்படுத்தப்பட்டமை ஆகிய காரணங்களினால் லொத்தர் விற்பனைக்கு தடை ஏற்பட்டது. அதற்கமைய இழக்கப்பட்ட சீட்டிழுப்பு தடவைகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 291 மற்றும் 2021 ஆம் ஆண்டில் 428 ஆகும். அதனால் விற்பனை வருமானத்தில் கருத்தில் கொள்ளக்கூடிய அளவிலான சதவீதம் இழக்கப்பட்டதாக கூறமுடியும். அதற்கமைய விற்பனை வருமானம் குறைவடைதல் விற்பனையின் சதவீதமாக மேற்கொள்ளப்படும் | கடந்த 03 வருடங்களில் பங்களிப்பு குறையும் போக்கு காணப்படுவதால், அதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பங்களிப்பிலான குறைவிற்கு காரணமாக அமைந்துள்ளது. | |

### 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் விற்பனை மேம்படுத்தல் மற்றும் விளம்பர பணிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,354,620 கூட்டுத்தொகையான பொருட்கள் களஞ்சியங்களில் விளைவற்றுக் காணப்பட்டது. | 2019 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல், 2020 மார்ச் மாதம் முதல் 2022 ஆரம்பம் வரையிலும் பரவிய கொரோனா தொற்றுநோய் ஆகியவற்றினால் எமது மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்ட விசேட சீட்டிழுப்புக்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு முடியாமை பிரதான காரணமாக அமைந்திருந்தமையால் கருத்திற் கொள்ளக் கூடிய அளவிலான பொருட்கள் எம்மிடம் பயன்படுத்தப்படாது வைத்திருப்பதற்கு நேர்ந்துள்ளது. | விளைவற்றுக் காணப்படும் விளம்பரப் பொருட்களை முறையான நடைமுறைக் கமைய பயன்படுத்த வேண்டியமை. |
| (ஆ) லொத்தர் சீட்டிழுப்புக்களில் பரிசில்களாக வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,787,668 கூட்டுப் பெறுமதியான தங்கக் காசுகள் மற்றும் மாலைகள் உள்ளடங்கலாக 53 அலகு தங்கப் பொருட்கள் உரிய பணிகளுக்கு பயன்படுத்தப்படாது வங்கியின் காப்பறையில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் தற்போதைய பெறுமதி ரூபா 3.86 மில்லியன் ஆகும். | இந்த தங்கப் பொருட்களை இதற்கு முன்னர் விசேட சீட்டிழுப்பொன்றின் பரிசிலாக உள்ளடக்கி வெற்றியாளர்கள் முன்வராமையின் அடிப்படையில் தற்போது களஞ்சியத்தில் எஞ்சியுள்ளது. அவ்வாறே இந்த ஆண்டினுள் பொருட்களை பயன்படுத்தியமையின் காரணத்தினால் தொடர்ந்தும் களஞ்சியத்தில் எஞ்சியுள்ள தங்கப் பொருட்களின் பெறுமதி ரூபா 942,157 ஆகும். அந்த பொருட்களின் பெருமளவானவை ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்துவதற்கு | விளைவற்றுக் காணப்படும் வெகுமதிப் பொருட்கள் உரிய நடைமுறைக் கமைய லொத்தர் சீட்டிழுப்புக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

திட்டமிடப்பட்டிருந்த விசேட சீட்டிழுப்புக்களில் விசேடமாக தனநிதானய ஆயிரமாவது சீட்டிழுப்பில் மேலதிகமாக பரிசில்களாக உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.